பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 24 றஜப் 20 இதழ்: 147
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8-7-77

# சஞ்சீவரெட்டி இந்திய ஜனாதிபதியாவார்

புதுடில்லி, ஜூலை 7
இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக லோக சபை சபாநாயகர் திரு. என். சஞ்சீவரெட்டி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

அடுத்த மாதம் ஆறும் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளராக திரு. என். சஞ்சீவரெட்டியை நிறுத்துவதென்று ஜனதா கட்சி இன்று காலை ஏகமனதாகத் தீர்மானித்தது.

சபாநாயகர் திரு. நீலன் சஞ்சீவரெட்டியை ஆமோதிப்பதென காங்கிரஸ் கட்சியின் பார்லிமென்டரி குழுவும் முடிவு செய்துள்ளது.

தமது இம்முடிவை பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய்க்கு அறிவிக்கும் அதிகாரத்தை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவானிடம் குழு அளித்துள்ளது.

இது பற்றி காங்கிரஸ் செயலாளர் திரு. ராஜு தெரிவிக்கையில், 'பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி திரு. சவான் குழுவிடம் விளக்கினார் என்றும் இதுபற்றி ஆலோசனை நடத்திய பின் திரு. சஞ்சீவரெட்டியை ஆமோதிப்பதென முடிவு செய்யப்பட்டது என்றும்' கூறினார்.

காங்கிரஸ் பார்லிமென்டரி குழுவின் கூட்டம் இன்று புதுடில்லியில் நடைபெற்றது. (உ)

# வெங்காயச் செய்கை வெகுவாகப் பாதிப்பு!

## புழுத்தாக்கத்தால் பயிர்கள் அழிவு!

### விவசாயிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி
வடபகுதியில் 1025 ஏக்கர் நிலத்தில் புழுவின் தாக்கத்தினால் வெங்காயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதால், வெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விதைவெங்காயத் தட்டுப்பாட்டினாலும் கலப்படத்தினாலும் இம்முறை பெருந்தொகையான விவசாயிகள் வெங்காயச் செய்கையை முற்றாகக் கைவிட்டுள்ளனர்.

வெங்காயப் பயிரில் புழுத்தாக்கத்தை தடுக்க புதிதாக 'அம்புஸ்' என்ற மருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபோதிலும், இம் மருந்து உண்மையான விவசாயிகளுக்கு கிடையாததினால் அவர்கள் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

1 அவுன்ஸ் வீதம் 50 கலன் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டிய இம்மருந்தின்விலை 2 அவுன்ஸ் போத்தல் 35 ரூபாவாக இருந்தபோதிலும், கறுப்புச் சந்தையில் 70 ரூபாவரை விற்பனையாகின்றதாம்.

தற்பொழுது யாழ்ப்பாணத்தில் வெங்காயத்தின் விலை றாத்தல் 5 ரூபாவாக அதிகரித்துள்ளது. சில இடங்களில் வெங்காயம் பெறமுடியாமல் இருக்கிறது.

இதேசமயம், விவசாய பகுதியினர் இந்தியாவிலிருந்து 300 தொன் விதைவெங்காயத்தை இறக்குமதிசெய்ய முயற்சி எடுத்துள்ளனர். இவ்வெங்காயம் இம்மாத இறுதியில் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (க

## கிரிக்கெட் டெஸ்ட்

### ஆஸி. 247—7

மான்செஸ்டர், ஜூலை 7
ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு இன்று ஆரம்பமான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா முதலில் தடுப்பெடுத்தாடியது.

முதல் இன்னிங்ஸில் ஆஸி 7 விக்கட்டுகளை இழந்து 247 ஓட்டங்கள் எடுத்தது. மக்கோஸ்கர் 02, கிறேக் சப்பல் 44, டேவிட் 34, சேர்ஜன்ட் 14, ஹுக்ஸ் 30

# ரஷ்யமாநாட்டுக்கு தமிழர் கூட்டணிக்கு அழைப்பு!

உடுப்பிட்டி, வியாழன்
''ரஷ்யாவில் நடைபெறவுள்ள மகாநாடு ஒன்றில் 'தமிழ்ஈழம்' பற்றிய கோரிக்கையை விளக்குவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் அழைக்கப்பட்டுள்ளனர்''.

இத்தகவலை தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. வண்ணை ஆனந்தன் கரவெட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்பொழுது வெளியிட்டார்.

''உடுப்பிட்டித் தொகுதித் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. த. இராசலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வண்ணை ஆனந்தன் மேலும் கூறியதாவது!

''பழம்பழுத்தால் வௌவால் தேடி வருவது போல, எமக்குத் தமிழ்ஈழம் கிடைக்கப்போவது நிச்சயம், என்பதை அறிந்துகொண்ட ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகள் எமக்கு உதவி செய்ய முன்வந்துள்ளன.

''ரஷ்யர்கள் சமீபத்தில் யாழ்நகர் வந்தபொழுது இங்கு தமிழினத்திற்காகப் போராடப்போவதாகக் கூறிக்கொள்ளும் வேட்பாளர்களைச் சென்று காணவில்லை; தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலகத்தையே தேடிச்சென்றுபேச்சுவார்த்தை நடாத்தினர்.

''அவர்கள் வெறுமனே எம்மோடு கதைத்து விட்டுச் செல்

(6-ம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு முன்னர் பூட்டோ விடுதலை

இஸ்லாமாபாத், ஜூலை 7
திடீர்ப் புரட்சியைத் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவும், மற்றும் எதிர்க்கட்சி அரசாங்கத் கட்சித் தலைவர்களும் பொதுத்தேர்தலுக்கு முன்னர் விடுதலை செய்யப்படுவார்கள் என்று ஆட்சி நடத்தும் இராணுவதலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறும். அதற்கு ஒரு மாதகாலத்துக்கு முன்னர் இவர்கள் விடுதலை செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் பிரச்சாரத்துக்கு ஒரு மாத காலமே அனுமதிக்கப்படும் என்றும் அதற்கு முன்னர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட யாரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் இராணுவச் சபை அறிவித்துள்ளது.

பூட்டோவை எதிர்த்த காரணத்துக்காக கடந்த 2 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்த 40 பேர் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

## யாழ். ஆஸ்பத்திரியில்

# மருத்துவ மாதர் திடீர் வேலைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மருத்துவ மாதர் அனைவரும் நேற்று நண்பகலிலிருந்து திடீர் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிறந்த ஒரு குழந்தை மூன்று தினங்களில் காணாமற்போனது தொடர்பாக மருத்துவ மாதர் ஒருவர் நேற்று தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார். இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே இத்திடீர் வேலை நிறுத்தம் தலைதூக்கியதாகத் தெரியவருகிறது.

வேலணையைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கு கடந்த மாதம் 17ம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தை 20-ம் திகதி காலை திடீரெனக் காணாமற்போய் விட்டது. இது தொடர்பாக யாழ். ஆஸ்பத்திரியில் சுகாதார சேவைகள் அத்தியட்சகர் விசாரணைகள் நடத்தியிருந்தார். பொலிஸாரும் விசாரணைகள் மேற்கொண்டிருந்தனர்.

## வங்கிஊழியர் சம்பளஉயர்வு அடுத்த வாரம் கிடைக்கும்

கொழும்பு, வியாழன்
வங்கி ஊழியர்களின் நன்மை கருதி நிதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினால் அளிக்கப்பட்ட இடைக்கால சம்பள உயர்வு ஏற்பாட்டை அடுத்த வாரம் நடைமுறைக்குக் கொண்டு வருவதென சகல வங்கிகளின் நிர்வாகமும் முடிவு செய்துள்ளன.

இந்த இடைக்கால சம்பள உயர்வு ஏற்பாட்டின் கீழ் பென்சன், வைத்திய வசதிகள், மற்றும் பல நன்மைகளையும் வங்கி ஊழியர்கள் பெறவிருக்கிறார்கள். சம்பள அடிப்படையில் வங்கி ஊழியர் 72-ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் இரு சம்பள உயர்வை பெற்றுக்கொள்வார்கள்.

## அபராதம் ரூபா 4,000!

பிங்கிரியா, வியாழன்
தீப்பெட்டியை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வர்த்தகர் ஒருவருக்கு 4000 ரூபா அபராதமும், 5 வருட கால ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்து வாரியப்பொல நீதிபதி தீர்ப்பளித்தார். (உ)

## அறிவித்தல்

வணக்கத்துக்குரிய பிதா பி. ஏ. ஜோன் அவர்கள் காலமாகிவிட்டதைத் தொடர்ந்துசம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டிகளும், பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் இம் மாதம் 10ந் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று கல்லூரி அதிபர் அறிவிக்கின்றார். வணக்கத்துக்குரிய பிதாவின் நல்லடக்கம் நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

6609

### மணிவாக்கு

துவக்குக்குள்ள பயம் அது சுடுபட்டபின்பே போய் விடும். அன்பின் பிணிப்பு வரவர இறுகுகிறது. எனினும் அதுவொரு பிணிப்பாய் உணரப்படுகிறதில்லை.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# வேதனைதரும் நிகழ்ச்சிகள்

பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்புத் தினம் நெருங்க நெருங்கத் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது

மேடைகளில் பேசப்படும் கனல்கக்கும் பேச்சுக்கள் உணர்ச்சி வெறியைக் கிளப்பிவிடுமென்பது பேச்சாளர்களுக்குத் தெரியாததல்ல. பேச்சாளர்களில் சிலரும்கூட உணர்ச்சிவசப்பட்டுப்போவதும் வழக்கம்.

பேச்சுக்கள் தவிரத் தீவிர வதந்திகளும் சுவர் எழுத்துக்களும் மக்கள் மத்தியில் ஆத்திரமூட்டக்கூடியதாய் அமைந்துவிடுகின்றன. சுவரொட்டிகள் ஒட்டுவதற்குத் தேர்தல் சட்டம் தடைவிதிக்கின்றது. ஆனால் யார் எவர் என்று தெரிந்து கொள்ளமுடியாமல் விஷமத்தனமான வாசகங்களைச் சுவர்களில் எழுதிப் பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்ற நிலையை ஏற்படுத்தி விடுகின்றனர்.

ஒரு கட்சியிலேயே ஒன்றாக இருந்தவர்கள், ஒரு வீட்டிலேயே ஒற்றுமையாக வாழ்ந்தவர்கள் தேர்தல் காரணமாக இன்று பகைவர்களாக மாறி நிற்கும் பரிதாபக் காட்சியைக் காணக் கூடியதாயிருக்கிறது

ஒரே கொள்கையை முன வைத்துப் போராடுபவர்களும்கூடத் தேர்தலில் வெற்றியீட்டும் ஒரே நோக்கத்துக்காக ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசிக் கொள்வதுமட்டுமல்ல ஆதரவாளர்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி மக்களைப் பீதியடையச்செய்கின்றனர்.

நாட்டின் பல பாகங்களிலும் சிறுசிறு கைகலப்புகளும் கல்வீச்சுகளும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

நாவலப்பிட்டியில் நடந்த கல் வீச்சுச் சம்பவத்தையொட்டி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சிலரை நீதிபதி கடுமையாக எச்சரித்திருக்கிறார் குழப்பம் செய்பவர்கள் அவர்கள் எவராயிருந்தாலும் தேர்தல் வாக்களிப்பு முடியும்வரை விளக்கமறியலில் வைக்கப் படுவார்களென்றும் வாக்களிக்கக்கூட அவர்களுக்கு வாய்ப்பில்லாமற் போய்விடுமென்றும் நீதிபதி எச்சரித்திருக்கிறார்.

அறுபதுகோடி மக்களுக்கு மேல் வாழும் இந்தியநாட்டில் ஆட்சிமன்றத்துக்கான தேர்தலும் மாநில சட்ட சபைகளுக்கான தேர்தலும் சமீபத்தில் அமைதியாக நடந்து முடிந்திருக்கின்றது. ஆட்சி மாற்றம் அமைதியாக நடைபெற்றிருக்கிறது ஒரு அமைதிப் புரட்சியே நடைபெற்றிருக்கிறது.

இரண்டொரு மாநிலங்களில் சில சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும்அத்தனை கோடி மக்கள் வாழும் ஒரு பெரிய நாட்டில் அந்தச் சம்பவங்களைப் பெரிதாகக் கருத முடியாது.

ஆனால் நமது சிறிய நாட்டில் ஒரு தேர்தலுக்காக உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படவேண்டுமா?

நாட்டில் நடைபெறும் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் எல்லாவற்றையும் விட மட்டக்களப்புப் பகுதியில் நடைபெற்றுள்ள வாள்வெட்டுச் சம்பவமும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் வேதனையளிப்பதுடன் தமிழ் பேசும் மக்கள் வெட்கப் படவேண்டியதுமாகும்.

தேர்தல் வரும்போகும். மக்கள் வாழவேண்டியவர்கள்.

அமைதியானதேர்தலுக்கு இனியாவது கட்சித் தலைவர்களும் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் சமய சமூகத் தலைவர்களும் முழு மனதுடன் உழைக்க முன்வரவேண்டியது அவசியமாகும்.

## முதல்வனே முனியப்பாவே!

—கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை—

சித்திரக் கலைகள் பொங்கும்
திருத்தலச் சிறப்பு வாய்ந்த
முத்தனே முதிய கோட்டை
முதல்வனே முனியப் பாவே!
நித்தியப் பொருளே! ஞான
நிறைவுயர் நிலவே! என்றன்
சித்தமெய் குடியி ருந்தே
திருவருள் செய்கு வாயே!

நெஞ்சினில் உறைவாய்! நல்ல
நினைவினில் நிறைவாய்! அன்பு
கொஞ்சிடும் குணமார் கொள்கை
குலவிடக் கூரார் பண்பு
மஞ்சினில் மணியாய் மக்கள்
மலர்ந்திட அருள்வாய்! உண்மை
விஞ்சுமெய்க் கருணைப் பேருய்
விளங்கிடும் முனியப் பாவே!

செல்வமே! தேனே! ஞானத்
திருவருட் சிறப்பார் சித்தே!
சொல்லினிற் சுவையே! அன்பைச்
சொட்டுமெய்த் தூய முத்தே!
கல்வியே! கனகே! காட்சிக்
கவினுயர் கனிவார் வித்தே!
நல்லயாழ்ப் பதியின் கண்ணே
நடமிடும் முனியப் பாவே!

[யாழ். கோட்டை முனீஸ்வரன் கோவில் சங்காபிஷேக உற்சவம் இன்றிரவு நடைபெறும் மஞ்சத்திருவிழாவுடன் நிறைவு பெறுகிறது]

# "சுதந்திரமாக வாழவே நாம் இன்னல் படுகிறோம்"

வ ந. நவரத்தினம்

மட்டுவில், வியாழன்

'வெளியிலிருக்கும் தமிழர்கள் எமது சுதந்திரத்தில் பங்குகொள்ள முழுக்க முழுக்க உரிமையுண்டு. அவர்களுக்கு என்றும் எமது கதவுகள் திறந்திருக்கும்'

நாவற்குழியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில், எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சாவகச்சேரித் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

கருத்தரங்கிற்கு திரு. இ. நல்லையா தலைமை வகித்தார்.

தமிழன் அடிமைத்தளையை அறுத்தெறிந்து பூரண சுதந்திரமாக வாழவேணடுமென்பதற்காகவே நாம் இத்துணை இன்னல்களை அடைகிறோம் என்று திரு. நவரத்தினம் கூறினார்.

திரு. ஆ. இராஜநாயகம் பேசும்போது கூறியதாவது:

'தந்தை செல்வா அகிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றியவர். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நமது தமிழர் விடுதலைக்கூட்டணி பணிபுரிந்துவருகிறது. கூட்டணியின் செயல், மூச்சு, பேச்சு அத்தனையும் தமிழினத்தின் விடுதலைக்காக, சுபீட்சத்திற்காக, அதன் சுதந்திர வாழ்விற்காகவே அமைந்துள்ளது. ஆகவே தமிழினம் ஏகோபித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிக்கவேண்டும்.

சனசமூக நிலையத் தலைவர் திரு. த. கணேசராசா, திரு. ஆ. நடராசா, திரு. மு பாலரத்தினம் உட்படப் பலர் பேசினர். (அ)

# 'கூட்டணிக்கும் துரையப்பா கோஷ்டிக்குமட்டுமேபோட்டி'

## யாழ்ப்பாணம் பற்றி இராஜசூரியர்

யாழ்ப்பாணம், வெள்

"யாழ்ப்பாணத்தொகுதியில் தமிழர் கூட்டணிக்கும் துரையப்பாகட்சி ஆதரவாளருக்கும் இடையில்தான் போட்டி நிலவுகிறது' காங்கிரஸ் தற்போது மூன்று பிரிவுகளாகப் பிரிந்து போட்டியிடுவதால், காங்கிரஸ் சார்பினர் வெற்றியீட்ட முடியாது. தமிழர் கூட்டணியில்ஒரு காங்கிரஸ், குமார் பொன்னம்பலம் மற்றொரு காங்கிரஸ், மூன்றாவதாக ஏபிரகாம் காங்கிரஸ் என்றநிலையில் காங்கிரஸ் இப்போது உள்ளது."

யாழ்ப்பாணத்தில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ஏ. ஜி. இராஜசூரியரை ஆதரித்து பண்டியந்தாழ்வில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. இராஜசூரியர் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு த. ஸ்ரனிஸ்லோஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராஜசூரியர் தொடர்ந்து பேசுகையில், பொருளாதாரத்தில் விடுதலை காணுதவரையில் நாட்டைப் பிரிப்பது உகந்தகாரியமல்ல. இது சுக்கானில்லாத படகுக்கு ஒப்பானது என்றார்.

இக்கூட்டத்தில் நல்லூர்த் தொகுதி சுயேச்சை வேட்பாளர் திரு. இராஜ இராஜேஸ்வரன் தங்கராசாவும் கலந்து கொண்டுபேசினர்.

# "பத்து ஆண்டுக்கு முன்னரே தமிழ் ஈழம் வந்திருக்கும்"

-- வி. குமாரசாமி

யாழ்ப்பாணம், வெள்ளி

'கடந்த 21 வருடங்கள் நான் உங்கள் எம். பியாக இருந்திருந்தால் இன்று இத்தேர்தல் 'தமிழ் ஈழ' அரசிலேயே நடத்தப்பட்டிருக்கும்'.

தவசிக்குளத்தில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரித்தொகுதி ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு வி. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பி முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. வி. குமாரசாமி மேலும் கூறியதாவது;

நான் தொடர்ந்து எம். பியாக இருந்திருந்தால் இத்தேர்தல் இன்று தமிழ்ஈழத்திலேயே நடந்திருக்கும். தமிழ் ஈழத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி, பத்துவருடத்திற்கு முன்னரே தமிழ்ஈழம் மலர வழிசெய்திருப்பேன்.

நாம் பொருளாதாரத்தை முன்னேற்றியபின்தான் தமிழ் ஈழப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும், 3வருட காலத்தில் நான் தமிழ்ஈழத்தின் பொருளாதாரத்தை முன்னேற்றுவேன்.

இளைஞர்கள் குடியேற்றத் திட்டத்தை ஆரம்பித்து. கிளிநொச்சி, முல்லைத்தீவுத் தொகுதிகளை உருவாக்கியதுபோல், பூநகரிமுதல் திருக்கேதீஸ்வரம் வரை குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்து எட்டுபுதியதமிழ்த் தொகுதிகளை உருவாக்குவேன்.

திருவாளர்கள் வே. கனகசபை, ஏ. தில்லைநாதன், கு. பரமசாமி, வி. பரராஜன் ஆகியோரும் பேசினர்.

## 'தமிழ் இளைஞர் சிறைசென்றது ஏன்?"

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழ் இளைஞர்கள் சிறைவாசம் அனுபவித்தது ஏன் என்பதை வாக்காளர்கள் சிந்திக்கவேண்டும். வண்ணை ஆனந்தன் சிறையில் சொல்லொணாத் துன்பம் அனுபவித்ததும், காசி ஆனந்தனின் தந்தை பாரிசவாதத்தில் முடங்கிக் கிடந்த நேரத்தில் அவரது குடும்பமே பெருந்துயரம் அனுபவித்ததும் ஏன் என்றால் தமிழன் இன்னோர் இனத்திற்கு அடிமைப்படாமல் சுதந்திரத் தமிழ் நாட்டில் வாழ வேண்டும் என்பதற்காகப் போராடியதால்தான்."

இவ்வாறு திரு. குணராசா 'தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர் - யாழ்ப்பாண வேட்பாளர்களை ஆதரித்து கண்டி வீதியில் நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. சிவசிதம்பரம் யாழ் தொகுதி வேட்பாளர் திரு. யோகேஸ்வரன் உட்படப் பலர் பேசினர். (கி-அ)

## சமூகத் தொண்டர் சின்னத்துரை

அமரர் அப்பாபிள்ளை சின்னத்துரை, தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகையார். இவரின் கல்விப் பணிக்கு நித்தியசான்று பகர்வதற்காக இவரால் இலவசமாக வழங்கப்பட்ட நிலத்தில் நினைவுச் சின்னமாக நிமிர்ந்து நிற்கிறது கொக்குவில்நாமகள் வித்தியாசாலை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியரான இவர், இந்தியா சென்று நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்திற்கு விக்கிரகம்அமைத்தார். கோணாவலை வயிரவ கோவில் திருப்பணிச்சபைதலைவராக இருந்து அரும்பணி புரிந்து, கோவிலில் மிருகப்பலியிடுவதைத் தடுத்ததுடன் அன்னதானமும்வழங்கி வந்தார்.

30 ஆண்டு காலமாக கொக்குவில் கிராமசபை உறுப்பினராகவும், கிராமசபை 4ம் வட்டார மக்கள் குழுத்தலைவராகவும், சமாதான நீதிபதியாகவும் இருந்து சமூகத் தொண்டாற்றினர். அவர் ஆத்மா சாந்தியடைக.

—ச. மு. ஆறுமுகம்

## டாக்ஸி கடத்தல்

களுத்துறை, வியா.

இரவு வேளை ஐவர் அடங்கிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்று டாக்ஸி சாரதியைக் கீழே பலவந்தமாக இறக்கிவிட்டு, டாக்ஸியைக் கடத்திச் சென்றுவிட்டதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் களுத்துறையில் நடைபெற்றது. (உ)

# "இடதுசாரிகளுடன் இணைவதன்மூலம் தமிழர் பிரச்னை தீரும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்தால் நாட்டின் தீராத பிரச்னைகள் எல்லாம் தீரும்" என்று நெடுந்தீவு மத்தியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ஊர்காவற்றுறை இடதுசாரி ஐக்கியமுன்னணி வேட்பாளர் திரு. கே. கனகரத்தினம் பேச்சையில் கூறினர் திரு. குமாரவேலு இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

திரு. கனகரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எதிர்வரும் தேர்தலில் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்கப்போவது திண்ணம். இடதுசாரிகளுடன் தமிழர் இணைவதன் மூலமே நலம் பெறமுடியும்." (உ)

# ஐ. தே. க. அபேட்சகர் தாக்கப்பட்டார்!

## இருவர் கைதாகி விடுதலை

கொழும்பு, வியா.

மகர தொகுதியில் ஐக்கிய தேசியக்கட்சிசார்பில் போட்டியிடும் திரு. ரியூடர் குணசேகரா கோஷ்டி ஒன்றினல் வழிமறித்துத் தாக்கப்பட்டுள்ளார்.

திரு. குணசேகராவுக்கு தலையில் பலத்த காயங்களுடன் காரும்பலத்தசேதத்துக்குள்ளானதாம். திரு. குணசேகரா தமது தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளவதற்காக காரில் சென்றுகொண்டிருந்தபோதே இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டபின்னர் விடுதலையாகினர். (இ)

# உகண்டாவில் மனித உரிமை மீறல்?

# ஐ. நா. குழு நேரடி விசாரணை

## பொதுச்செயலாளர் வால்ட் ஹெய்ம் ஏற்பாடு

நியுயோர்க், ஜூலை 7

உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பது பற்றி ஐ. நா. குழு ஒன்று நேரடியாக விசாரணை நடத்தும். இதற்கான அனுமதியை இடி அமீன் வழங்கியுள்ளார். இத்தகவலை ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் வால்ட் ஹெய்ம் வெளியிட்டார்.

உலகப் பொருளாதார அமைப்பில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்று கலாநிதி வால்ட் ஹெய்ம் வலியுறுத்தினார்.

உலக வர்த்தகத் தொடர்பின் போக்கில் மாற்றம் காணப்படாவிட்டால் குழப்ப நிலை உருவாகலாம் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பேசுகையிலேயே கலாநிதி வால்ட் ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வறிய நாடுகள் வாட்டம் அடையாவண்ணம் உலகப் பொருளாதாரத்தில் மாற்றம் ஏற்பட நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று அவர் தமது உரையில் கோரிக்கை விடுத்ததார்.

மத்திய கிழக்குப் பிரச்னை குறித்துக் கலாநிதி வால்ட் ஹெய்ம் பிரஸ்தாபிக்கையில் இப்பிரச்னை தீர்வதற்குரிய மாநாடு கூடிய விரைவில் கூட்டப்படவேண்டுமென்று கூறினார்.

இஸ்ரேல் பிரதமர் பெகினை இம்மாதம் 22ந் திகதி நியூயோர்க்கில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

அணு ஆயுத உற்பத்தியில் தாமதம் காட்டப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

**உகண்டா விவகாரம்**

உகண்டாவில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படும் முறைப்பாடுகள் குறித்து நேரடி விசாரணை நடத்தும் பொருட்டு ஐ. நா. சபைக்குழு ஒன்று உகண்டா செல்வதற்கு அந்நாட்டின் ஜனாதிபதி இடி அமீன் அனுமதி வழங்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்

உகண்டாவில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாமலே கொல்லப்படுகின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று தற்போது உகண்டாவில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள உகண்டாவின் முன்னாள் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 4 மாதங்களில் 6443 வாகனங்கள் இறக்குமதி

கொழும்பு, வியாழன்

கடந்த நான்கு மாதங்களில் வெளிநாடுகளிலிருந்து 6,443 மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் முதல் ஜூன் மாதம்வரையிலான காலப்பகுதியிலே இத்தொகை வாகனங்கள் இறக்குமதியாகியுள்ளன.

கார், வான் ஆகியன தனியார் துறையினரின் பாவனைக்கும் பஸ், லொறி ஆகியவற்றின் 'செஸி'கள் அரசாங்க சேவைகளுக்குமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. (இ)

## தொடர்மாடிக் கட்டிடத்தில் தீ!

கொழும்பு, வியாழன்

கொழும்பு ஆமர் வீதியில் உள்ள மாடிக்கட்டிடத்தில் உள்ள 'பெயின்ட்' விற்பனை செய்யும் கடை ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தினால் கடைமுற்றாக எரிந்து சாம்பலாகியது

சுமார் 100 குடும்பங்கள் வசிக்கும் இம் 3மாடிக்கட்டிடத்தில் ஏற்பட்டதீயை கொழும்பு தீயணைக்கும் படையினர் மிகவும் தீரமுடன் இயங்கி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

கீழ்ப்பகுதியில், உள்ள பெயிண்ட் கடையில் ஏற்பட்ட தீ மேல்மாடிகளுக்கும் பரவிவிடுமோ என அஞ்சிய அங்கு தங்கியிருந்த குடும்பத்தினர் தமது உடைமைகளுடன் வெளியேறி சிறிது நேரம அல்லோல கல்லோலப்பட்டனர்.

நேற்றுமுன்தினமிரவு 7 மணிபோல் நடந்த தீ உடன் அணைக்கப்பட்டது. (இ)

## சி.ஐ ஏ. - சஞ்சய் தொடர்பு?

### தகவல் வெளியிட்டவர் மயங்கி விழுந்தார்!

புதுடில்லி, ஜூலை 7

பாரத நாட்டுக்குள் அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனத்தின் தலையீடு உண்டு என்று கூறப்படுவது தொடர்பாக தகவல் தெரிந்தவர் என கருதப்படும் நபர் ஒருவர் பொலிஸ் விசாரணைக்கிடையிலேயே திடீர் மயக்கமுற்று மருத்துவ மனையில் சேர நேர்ந்தது.

இச்சம்பவம் பற்றி பொலிஸ் விசாரணைகள் கூறுவதாவது:

'சி. ஐ. ஏ. ஏஜென்ஸி பாரத நாட்டுக்குள் ஊடுருவல் செய்தது பற்றி தம்மிடம் ஆதாரபூர்வ தகவல்கள் உள்ளன என்று பிரஸ்தாப நபர் மத்திய வீடமைப்பு அமைச்சர் திரு. சரண் சிங்கிடம் தெரிவிக்க முன்வந்திருந்தாராம்.

அமைச்சரின் வசிப்பிடத்திற்கு பொலிசார் செல்வதற்கிடையில் பிரஸ்தாப நபர் திடீர் மயக்கம் போட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படவேண்டிய நிலைக்குள்ளானாராம்.

கிறிஸ்ரி என்ற சி. ஐ. ஏ. ஏஜென்ட் தேநீரில் தமக்கு விஷம் கலந்து தந்துவிட்டதாக ராஜேஸ்சர்மா என அடையாளம் காணப்பட்ட இந் நபரிடம் இருந்த குறிப்பு ஒன்று கூறியது.

திரு. சஞ்சய் காந்தி உட்பட மாஜி அமைச்சர்கள் தமது காரியதரிசி கிறிஸ்ரி ஊடாக சி. ஐ. ஏ.யுடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றிய பதிவு நாடாக்கள் தம்மிடம் உண்டு என்ற தகவலையும் பிரஸ்தாப நபரது குறிப்பு தெரிவித்ததாம்.

தமது சூட்கேஸுக்குள் 40000 ரூபா இருப்பதாக அவரது குறிப்பில் கூறப்பட்டிருந்த போதிலும் பொலிசார் தேடுதல் நடத்திய போது 40 ரூபா மட்டுமே காணப்பட்டதாம்.

ராஜேஸ் சர்மா என்ற இந்த நபரது காரியதரிசி கிறிஸ்ரி என்பவர் ஊடாகவே சி. ஐ. ஏ.யுடன் சஞ்சயும் பிரஸ்தாப மந்திரிகள் மூவரும் தொடர்பு கொண்டிருந்தனர் என்று அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்ததாம்.

புதுடில்லி ரயில்வே நிலையத்தில் இறங்கிய இந்நபர் அமைச்சரின் வசிப்பிடத்திற்குச் டாக்ஸி ஒன்றில் சென்றடைவதற்குள்ளாகவே மயக்கமுற்று வில்லிப்டன் மருத்துவமனையில் அந்த டாக்ஸியிலேயே அனுமதிக்கப்பட நேர்ந்ததாம்.

ராஜேஸ் சர்மாவின் வயிறு கழுவப்பட்டு அவர் இப்போது அபாய கட்டத்தைக் கடந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். (உ)

ரொடீஷிய விவகாரம்:

# சமரஸ முயற்சியில் தொடர்ந்தும் இழுபறி

லண்டன், ஜூலை 7

ரொடீஷியாவில் பெரும்பான்மை கறுப்பர் ஆட்சியை ஏற்படுத்துவது தொடர்பாக பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும், ரொடீஷிய தேசியவாதத்தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில் கருத்து வேறுபாடு உருவாகியுள்ளது. ரொடீஷியாவில் பெரும்பான்மை கறுப்பர் இனத்துக்கும் சிறுபான்மை வெள்ளையர் அரசுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதனை அடுத்து பிரிட்டனால் ஜெனிவாவில் முன்னர் கூட்டப்பட்ட சமரஸ மாநாடும் எவ்வித சமரஸ தீர்வுமின்றி முடிவடைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

பாகிஸ்தானில்

# பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்காகவே இராணுவப் புரட்சி நடத்தினேம்

### ஜெனரல் ஹக் கூறுகிறார்

இஸ்லாமாபாத், ஜூலை 7

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி இன்னமும் மூன்று மாதங்களுக்கே நீடிக்குமென்று இராணுவத் தளபதி ஜெனரல் ஸியா உல்-ஹக் கூறியுள்ளார்.

அக்டோபர் மாதத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அவர் சிவில் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் நீக்கப்பட்ட அமைச்சுகளுக்கும் சிவில் அதிகாரிகளே பொறுப்பாகத் தற்போது இருந்துவருகின்றனர்.

அக்டோபர் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்காகவே ஆட்சி கைப்பற்றப்பட்டதென்றும், நாட்டின் நிர்வாகத்தில் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப்படப்போவதில்லையென்றும் ஜெனரல் ஹக் அறிவித்துள்ளார். இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் பாகிஸ்தானில் வன்செயல்கள் நின்றுவிட்டன என்று பத்திரிகைகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

இதேவேளை பாகிஸ்தானுக்கும் துருக்கிக்கும் இடையிலான நெருக்கமான உறவில் மாற்றம் எதுவும் ஏற்படாது என்று துருக்கி அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவையும், முக்கிய தலைவர்களையும் கைது செய்து இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் ஆட்சியை ஜெனரல் ஹக் கைப்பற்றியுள்ளாரென்பது தெரிந்ததே.

## 'பிரசாரம்செய்ய உரிமையுண்டு' —ராஜராஜேஸ்வரன்

யாழ்ப்பாணம், வெள்ளி

'எந்த ஒரு வேட்பாளரும் தொகுதியில் பிரசாரம் செய்வதற்கு உரிமை உண்டு. அவ்வுரிமையை பலாத்காரம் மூலம் பறிக்க முற்பட ஒரு சிலர் முயல்வது கண்டிக்கத்தக்கது' என்று நல்லூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா கோண்டாவிலில் நடைபெற்ற தமது பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 'சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெறுபவர்கள் ஆட்சிமன்றம் சென்று சாதிக்கப் போவது என்ன என்று கேட்பதில் அர்த்தமில்லை' என்றார். (உ)

# காமராஜர் பிறந்தநாளைக் கொண்டாட ஜனதா கட்சியும் ஏற்பாடு!

சென்னை, ஜூலை. 7

ஜனதா கட்சியின் தமிழ் நாட்டுப்பிரிவு இம்மாதம் 15-ம் திகதியில் இருந்து 22-ம்திகதி வரை கர்மவீரர் காமராஜரின் 75-வது பிறந்த தினத்தை பெரும் விழாவாகத் தமிழ் நாடெங்கும் கொண்டாடவிருக்கிறது.

இது பற்றி அறிவித்த ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுப்பிரிவுத் தலைவரும் மத்திய அமைச்சருமான திரு. பி. இராமச்சந்திரன் குறிப்பிட்ட ஒரு வாரமும் ஏழைகளுக்கும்குடிசை வாழ் மக்களுக்கும் உணவு வழங்கப்படுவதுடன் குழந்தைகளுக்கு இனிப்புகளும் வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

**மக்கள் பேரணிகள்**

இக்கொண்டாட்டத்தையொட்டி மக்கள் பேரணிகள் அமைக்கப்பட்டு கர்மவீரரின் கொள்கைகள் பிரசாரம் செய்யப்படும் என்றும் அவர்மேலும் கூறினார்.

**கலைஞர் தலைமையிலும் விழா**

இதேவேளை கர்மவீரரின் பிறந்ததினவிழா தி.மு.க. தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில்சென்னை சீரணியரங்கில் கொண்டாடப்படவிருக்கிறது என்பதும் கவியரசு கண்ணதாசன் ஏற்கனவே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (உ)


சிந்தெட்டிக் கற்பூரம்
பெட்டிகளில்

கிடைக்குமிடம்:
சென்றற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்
516, ஸ்கின்னர்ஸ் ரோட்டுத் தெற்கு,
கொழும்பு - 10

போன்: 24261-5


# இந்திய ஜனாதிபதி தேர்தல்: ஜனதாவுக்கு எம். ஜி. ஆர். ஆதரவு!

சென்னை, ஜூலை 7

எதிர்வரும் ஆகஸ்ட்மாதம் 6ம் திகதி நடைபெறவிருக்கும் பாரத ஜனாதிபதித் தெரிவில் ஜனதாகட்சிக்கு ஆதரவளிப்பதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்துள்ளது என்று அ.இ.அ.தி.மு.க. வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி தெரிவில் அ.இ.அ.தி.மு.க. தனி அக்கறை காட்டாது என்றும் ஜனதா கட்சி யாரை வேட்பாளராக நிறுத்துகிறதோ அவருக்கே ஆதரவு அளிக்கும் என்றும் அக்கட்சி வட்டாரங்கள் கூறின. (உ)

## "புனித இயக்கத்தின் வேட்பாளன் நான்"

— யோகேஸ்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழ் மக்களின் இதயம் போன்றது. அத்தகைய ஒரு புனிதமான விடுதலை இயக்கத்தின வேட்பாளனுக நான் நிறுத்தப்பட்டுள்ளேன். எனவே நான் மேடையில் ஒன்றும் வீடுகளில் ஒன்றும் ஒருபோதும் பேசமாட்டேன். தேர்தல் வெற்றிக்காக பொய்ப்பிரசாரம் செய்ய நான் முற்படமாட்டேன்".

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ்ப்பாணத் தொகுதி வேட்பாளர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் மார்ட்டின் வீதியில் நிகழ்ந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இக் கூட்டம் திரு. ஞானப்பிரகாசம் தலைமையில் நிகழ்ந்தது. திரு. யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் "தேர்தலின் பின்பும் முஸ்லீம் வட்டார மக்களின் நலன் கருதி அவ்வட்டாரத்தில் திறக்கப்பட்ட எனது தேர்தல் அலுவலகம் தொடர்ந்தும் இயங்கும். அங்கு போய் நான் அவர்களை சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து ஆவனசெய்வேன்" என்ருர். குருநகர் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. கிறிஸ்ரியன் திரு. சந்திரகாசன், சட்டத்தரணி ஆலாலசுந்தரம் உட்பட மற்றும் பலர் பேசினர். (கி-உ)

## "பரி. யோவான் கல்லூரி நற்பிரஜைகளை நாட்டுக்கு அளித்தது"

அரியாலை, வியான்

"பெற்ருேரும் பழைய மாணவர்களும் இதுவரை அளித்து வந்த ஒத்துழைப்பினுலும் அவர்கள் வழங்கிய நன்கொடைகளினுலும் பரி. யோவான் கல்லூரியை தனியார் கல்லூரியாக கடந்த 15 வருடங்களாக நடாத்த முடிந்தது. இக்கல்லூரியில் பணியாற்றும் அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பினல் கல்வியின் தரத்தை பேணிக்காத்ததுடன். நாட்டிற்குச் சிறந்த பிரஜைகளையும் இக்கல்லூரி உருவாக்கியுள்ளது."

இவ்வாறு பரி. யோவான் கல்லூரி. யாழ். அக்கடமி ஆகியவற்றின் நன்நோக்குச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து திரு. வைரமுத்து பேசுகையில் குறிப்பிட்டார்.

நிர்வாகிகள் பின்ருவமாறு தலைவர்: திரு. எஸ். கனகரத்தினம், உபதலைவர் பேராசிரியர் கே. நேசையா திரு. சுந்தரம்பிள்ளை, செயலாளர் திரு. ஏ. எஸ் தர்மலிங்கம், உபசெயலாளர்: திரு. ரி. குணசீலன்.

18 நிர்வாகசபை உறுப்பினரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் பரி. யோவான் கல்லூரி சமூக அறிவியற் கழக தமிழ் மன்ற உறுப்பினர்கள், ஒரு தேசிய இனத்திற்கு சுயநிர்ணய உரிமையின் பிரயோகம் அவசியமானதா? என்ற விடயம் குறித்து விவாதம் நடாத்தினர். இவ் விவாதத்திற்கு திரு. என் மயில்வாகனம் தலைமை வகித்தார். (உ)

## கிராமசபை பொறுப்பேற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி


கோண்டாவில் வடக்கு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடாத்தப் பட்டு வந்த பாலர் பாடசாலையைக் கொக்குவில் ஊராட்சி மன்றம் இம்மாதம் தொடக்கம் அரசாங்க நன்கொடையுடன் பொறுப்பேற்றுள்ளது. இப்பாடசாலைக்கு செல்வி மார்க்கண்டு விமலராணி ஆசிரியையாக நியமிக்கப்பட்டுள்ளார். (கா-அ)

## இணக்க சபை ஆரம்பக் கூட்டம்

சுழிபுரம், வியா.

சுழிபுரம் கிராமசபைப் பகுதி இணக்க சபை ஆரம்பக் கூட்டம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மேல்மாடியிலுள்ள நூலக மண்டபத்தில் நடைபெற்றது. வலிகாமம் மேற்குப் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணுசலம் தலைமையில் சபைக் கூட்டம்ஆரம்பமாகியது. நீதியமைச்சைச்சேர்ந்த திரு. எஸ் சச்சிதானந்தன் கலந்துகொண்டு இணக்க சபையின் வேலைத்திட்டங்களை யாவருக்கும் விளக்கிப் பேசிஞர்.

இணக்க சபை உறுப்பினர்களுக்குரிய நியமனச்சான்றுப் பத்திரங்களும் வழங்கப்பட்டன. திரு. அ. சின்னையா ஜே. பி. தலைமையில் இணக்க சபை செயல்படவுள்ளது. தலைவர் இதுவரை தம்மிடம் நூற்றி இருபதுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முறைப்பாடுகள் தெரிவிக்கப் பட்டுள்ளதாகத்தெரிவித்தார். (இ)



வேலர்: உன்னுடைய மேன் உத்தியோகமாகி விட்டானெண்டு கேள்வி... சீதனத்தைப்பேசி, என்ரை மேளுக்கு செய்துவைக்கிறது தான்.

மயிலர்: நீ விரும்பினுல் செய்து வைக்கிறன். ஆனல் பொடியன்ரை கந்தோர் இருபதாந்தேதியோடு மூடப்பட்டுப்போம்.

வேலர்: ஆண்டவா! பொடியன் வேட்பாளரின் லெக்சன் ஒபிசிலேயே வேலை!

மணியம்: ஒண்டு.. வேட்பாளர் வென்று ஆளும் கட்சியுடன் சேர்ந்தால் பொடியனுக்கு ராஜயோகந்தான்.

—சுந்தர்

## "இனமத பேதமற்ற ஆட்சி புரிந்தது ஐ. தே. கட்சியே"

- எஸ். அலோஷியஸ்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சிங்களமக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம்மக்கள் என்று பாராது ஐக்கியதேசியக்கட்சி இந்த நாட்டுக்குச் செய்த தொண்டுகளையும் சேவைகளையும் இந்த நாட்டுமக்கள்மறக்கமாட்டார்கள் ஜனநாயக ஆட்சி முறையை ஆணித்தரமாக நிலைநாட்டி தேசிய சுதந்திரத்தின் அடிப்படையில், பொருளாதார சுதந்திரத்தை அடைவதில் ஆர்வம் காட்டிய கட்சி ஐ. தே. கட்சி. இந்த நாட்டிலே இலவசக்கல்வியையும், இலவசசுகாதார சேவைகளையும் செயற்படுத்தி உணவு உற்பத்தி இயக்கத்தினையும் உறுதிப்படுத்தியது" என்று மானிப்பாய்த்தொகுதி ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. எஸ். அலோசியஸ் நவாலியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பேசும்போது கூறினர்.

இக்கருத்தரங்கு மகிழ்ராஜா தலைமையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து பேசுகையில் "ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்ததும் முதல் வேலையாக தமிழ்பேசும்மக்களின் பிரச்னைகளை தீர்த்துவைக்கும். ஐக்கிய இலங்கையே அதன் இலட்சியம். ஐ. தே. கட்சி ஆரம்ப காலததிலிருந்தே தேசியஒற்றுமையை நிலைநாட்டி வருகிறது. பதவிக்கு வந்ததும் பத்திரிகைகளுக்கு போதிய சுதந்திரம் அளிப்போம். தேர்தல்களை பின்போடமாட்டோம். சிறுபான்மை மக்களின் சமத்துவத்தை சட்டமூலமும் நிலைநாட்டிவைப்போம். ஜாதி-இன பாகுபாட்டை முறியடிப்போம்" என்ருர்.

## யாழ். இந்து இல்லப்போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் நடைபெறுகிறது.

வைத்திய கலாநிதி தி. கங்காதரன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிருர் திருமதி சீதாதேவி கங்காதரன் பரிசில்களை வழங்குவார். (இ)

## "3 தொழிற்சாலைகளுடன் தனிநாடு கோருவதில் அர்த்தமில்லை"

—குமார்

யாழ்ப்பாணம், வெள்ளி

'சுதந்திரமான சுயநிர்ணய முறையில் வாழுமுன்னர் வடக்குக்கிழக்கின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவேண்டும். சுயதேவைப் பூர்த்திக்குப் பின்பே தனிநாட்டைப் பற்றி நினைக்கலாம். இப்பொழுது வடக்குக் கிழக்கிலுள்ள மூன்று தொழிற்சாலைகளும் தனிநாடு ஒன்றிற்குப் போதாது. இன்னும் பல பெரிய தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும். அப்போது தான் தனிநாட்டையேனும் பெறலாம்'.

இவ்வாறு தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவரும் யாழ்ப்பாணத் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுபவருமான திரு. ஜி. ஜி (குமார்) பொன்னம்பலம் கொய்யாத்தோட்டம் புதுவீதியில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. மு. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஜி. ஜி. (குமார்) பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டதாவது:

'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைவிட்டுப் பெரும்பான்மைக் கட்சியொன்றில் சேர்ந்து தமிழர்களுக்கு உதவி பெற்றுக் கொடுப்பேன்' என்று நான் எக்கூட்டத்திலாவது சொல்லியிருந்ததாக நிரூபித்தால் இப்பொழுதே தேர்தலிலிருந்து விலகிவிட நான் தயார். ஜி. ஜி. காங்கிரசை நான் ஆதரித்ததாக திரு. வி. தர்மலிங்கம் கூறுகிருர். உண்மையில் நடந்தது என்னவென்ருல் தமிழ்க்காங்கிரஸ் கட்சி உறுப்பினன் என்ற ரீதியில் திரு. வி. குமாரசாமி சாவகச்சேரிக்கு ஒரு கூட்டத்திற்கு என்னை அழைத்திருந்தார். அந்தக் கூட்டத்தில் என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனல் அந்தக்கூட்டத்தில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவை என்னுல் ஏற்றுக் கொள்ளமுடியாததாக இருந்ததனல் அவற்றிற்கு மாருன பல கருத்துக்களைத் தெரிவித்து விட்டு இடையிலே அக்கூட்டத்திலிருந்து வெளிவந்துவிட்டேன். அதன்பின் கோண்டாவிலில் ஒருகூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு நான் அழைக்கப்படவுமில்லை; போகவுமில்லை.

இனவிடுதலையையும், தமிழகம் நிறுவுதலையும் பற்றியுமே சிந்திப்பதாகச் சொல்பவர்கள் வெறும் சொற்களை வைத்து மக்களை ஏமாற்றக்கூடாது. தமிழ்நாடு பெற்றபின் என்னசெய்யப்போகிருர்கள் என்பதைக் கூறவேண்டும்.

'வட்டமேசை மகாநாடுஒன்று நடத்துவதன்மூலமே சிங்களக் கட்சிகளுடைய, சோஷலிசக் கட்சிகளுடைய கொள்கைகள் தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்கின்றனவா என அறியக்கூடியதாக இருக்கும்' என்ருர்.

மற்றும் செல்வி ஜெனி, திருவாளர்கள் எஸ். செல்வராசா, நூர்முகமது, எம். சிங்கராஜா ஆகியோரும் உரையாற்றினர். (கூ-உ)

## "இவர்கள் குட்டு வெளியாகின்றது"

-சி. பொ. ம.

யாழ்ப்பாணம், வெள்ளி

"சாவகச்சேரித்தொகுதியில் போட்டியிடும் முன்னைநாள் பிரதிநிதிகள் இருவரும் தாம் அமைத்த ரோட்டுகளையும் கட்டுவித்த கட்டடங்களையும் பற்றி நிரல்படுத்தி வெளியிட்டு வருகின்றனர். தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் செய்தவையென்னவென்று இவர்களில் எவரும் ஒன்றும் வெளியிடவில்லையே. இவர்களின் குட்டு இங்கேதான் வெளியாகின்றது"

இவ்வாறு கொடிகாமத்தில் திரு. முருகேசு தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சுயாட்சிக் கழக வேட்பாளர் சட்டத்தரணி சி. பொ. மயில்வாகனன் கூறினர்

இனிமேலும் இத்தொகுதி மக்கள் ஏமாறத்தயாரில்லை என்பதை அவர்கள் உணரும் காலம் அண்மித்து விட்டது என்றும் அவர் கூறினர். (அ)


∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

வைத்திலிங்கம்ஸ்

இரும்பு — பித்தளை — மரஸ்குறு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனல்

ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு, கொழும்பு - 12

தொலைபேசி: 33143 — 4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530

## வரி விளம்பரம்

### தேவை

தமிழில் உறுப்பமையவும் விரைவாகவும் எழுதக் கூடிய வரி தேவை. இளைப்பாறிய ஆசிரியர் விரும்பத்தக்கது. கூடிதமூலம் விண்ணப்பிக்க வும். விளம்பர இல: 6603, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 6603

பெண் காசாளர் தேவை. ஆங்கில அறிவுடன் எண்கணி தத்தில் திறமையுள்ளவராக வும் இருத்தல் வேண்டும். சொந்த கையெழுத்தில் விண் ணப்பிக்கவும். விளம்பர இல. 6585, C/o ஈழநாடு லிமிட் டெட், யாழ்ப்பாணம். 6585

சுவீடன் நாட்டைச் சேர்ந்த இருவருக்கு சித்தன்கேணியில் அல்லது யாழ்ப்பாணத்திற் கும், காரைநகர் சீநோர் ஸ்தா பனத்திற்கும் இடையில் வீடு தண்ணீர் மின்சார வசதிகளு டன் வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு: S. Larsson, சீநோர், காரைநகர். 6587

### விற்பனைக்கு

இளைஞர்கள் விரும்பிப் படிப் பது "சாமிஜி" எழுதிய "தேர்தல் வருகிறது தெளி வாகச் சிந்தியுங்கள்" என்னும் புத்தகமே! கிடைக்குமிடம்; பூபாலசிங்கம், புத்தகசாலை, யாழ்ப்பாணம். 6601

5 ஸ்ரீ டைகர் கப் (2*5) மோட்டார் சைக்கிள் விற் பனைக்குண்டு கிழமை நாட்க ளில் பிற்பகல் 4 மணிக்குப் பின்னும் விடுமுறை நாட்களில் முழுநாளும் பார்வையிட லாம். சதா கிறிம் ஹவுஸ், கோட்டடி, சாவகச்சேரி. 6599

## "மின்விஸ்தரிப்புத் திட்டத்திற்கு வைரமுள்ள பனை மரக்கம்பங்கள் விநியோகித்தல்"

வட்டுக்கோட்டைக் கிராம சபை மின் விஸ்தரிப்புத் திட் டத்திற்கு மேற்காணும் விபரப் பிரகாரம் வைரமுள்ள பனை மரக் கம்பங்கள் நூற்றி என் பது (180) விநியோகிப்பதற்கு உரிய கூறு விலை கோரப்படு கின்றது. ரெண்டர்ப் படிவம் வட்டுக்கோட்டைக் கிராம சபை அலுவலகத்தில் 11-7-77-ம் திகதியிலிருந்து 20-7-77-ம் திகதி வரை காலை 8-00 மணியிலிருந்து மாலை 3-30 மணிவரை ரூபா 25/- ரெண்டர்ப் பணமாகவும் ரூபா 10/- ரெண்டர் படிவப் பணமாகவும் செலுத்தி பெற் றுக் கொள்ளலாம். ரெண்டர் ஏற்றுக் கொள்ளப்படும் இறு தித் திகதி 1977-ம் ஆண்டு ஆடிமாதம் 25-ம் திகதி காலை 10-00 மணி வரையாகும்.

### விபரங்கள்

1. குறித்த பனைமரம் ஒவ் வொன்றும் 30 அடி நீள மாக இருத்தல் வேண்டும்.
2. பனைமரம் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிளக்கப் பட்டு உள்ளே இருக்கும் பலம் அற்ற பாகம் (சோத்தி) அகற்றப்பட்டு, பின்னர் ஒன்றுக்கு இருத் தல் வேண்டும்.
3. கம்பத்தின் நுனிப்பாகம் 5 1/2 அங்குலம் விட்டம் உள்ளதாகவும், அடிப்பா கம் 8 3/4 அங்குலம் விட் டம் உள்ளதாகவும் இருத் தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவ லக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

நா. அமிர்தலிங்கம்
தலைவர்,
கிராமசபை-
வட்டுக்கோட்டை.
கிராமசபை-அலுவலகம்,
வட்டுக்கோட்டை.
4-7-77. 6602

## கேள்வி விளம்பரம்

### நயினமடு ஐயன்கோவில் றோட் 5ம் கட்டையடி பைப் வேலை

மேற்படி வேலைக்கான கேள் விகள் 27-7-77 புதன்கிழமை காலை 10-00 மணிவரை என் னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 25/-ம் மீளளிக்கப்படும் கேள்விப் பணமாக ரூபா 250/ ம் செலுத்துவதின் பேரில் 26-7-77 செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் மேல் பற்று தெற்கு கிராமசபையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் இணைப்பிரதி களில் தயாரித்து, தபாலுறை சீலிடப்பட்டு, அதன் இடது பக்க மேல்மூலையில் 'நயினமடு ஐயன்கோவில் றோட் 5ம் கட் டையடி பாலவேலை' எனக் குறிப்பிட்டு ஒரு பிரதியை எமக்கும், மறுபிரதியை பிராந் திய உள்ளூராட்சி உதவிஆணை யாளர், வவுனியா, அவர்கட் கும் அனுப்பப்படல்வேண்டும்.

சி. உ. செல்லத்துரை ஜே. பி.
தலைவர், கி. ச.
மேல்பற்று தெற்கு
கிராம சபை அலுவலகம்,
நயினமடு, நெடுங்கேணி.
5-7-77 6605

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஈடு 14944
காரைநகர், சுந்தரத்தனை
1. நாகலிங்கம் பரமநாதனும்
2. பெண் ஈஸ்வரியும் வழக்காளிகள்

எதிராக

இல்னர் ஒழுங்கை, வண் ணார்பண்ணை, யாழ்ப்பா ணம்
இராமலிங்கம் முத்தையா மகள் திலகவதிதேவி எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 14944ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின் னால் விபரிக்கப்படும் ஒரு துண் டுக் காணியை 1977ம் வருஷம் 3-8-77 (ஆவணி) மாதம் 3ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக் கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

### நீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 11,180/-ம் 17-7-1973 தொடக்கம் 26-2-1976 வரைக் கும் ரூபாய் 8,000/-க்கு 18 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக் கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 594/48. இதில் ரூபாய் 250/- செலவால் கொடுபட்டுள்ளது.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பா ணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை வடகிழக்கு இறை "நவிந்தன்செட்டியும் கட்டுத் தரையும்" நிந்தமூ-கப் பிரிக் கப்பட்ட பர 1 குளி 8. வீடும், இதற்கெல்லை கிழக்கு வேலாயுதர் கந்தையா கைம் பெண் மாணிக்கத்தின் ஆத னம், வடக்கு ஒழுங்கை, மேற்கு வயித்திலிங்கம் இரத் தினம் பெண் மங்களம்மாவின் ஆதனம், தெற்கு கணபதிப் பிள்ளை முத்தையாவின் ஆத னம் இதன் முற்பிடிவு இல: 302/175 இடடகலும்.

நா. ஸ்ரீரங்கநாதன்
விற்பனவு ஆணையாளரும் விலை மதிப்பாளரும்.
6, கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.
3-6-77. 6604

## சாராயத் தவறணையில்....

மட்டக்களப்பு, வியா

மட்டக்களப்பில் உள்ள சாராயத் தவறணையில் திடீர் சோதனை நடத்திய மது பரி பாலன ஆணையாளர் திரு. எச். பி. விஜயக்கோனும் கோஷ்டியினரும் 100 போத் தல் கலப்படம் செய்யப்பட்ட சாராயத்தைக் கைப்பற்றினர்.

சீல் வைத்த சாராயப் போத்தல் மூடிகளை திறக்கக் கூடிய சாதனங்களும் இத் தவறணையிலிருந்து மீட்கப்பட் டன.

இதை அடுத்து இத்தவறணை யின்அனுமதிப்பத்திரத்தைஉட னடியாக ரத்துச் செய்யுமாறு கமிஷனர் மட்டக்களப்பு அர சாங்க அதிபருக்கு ஆலோ சனை வழங்கியுள்ளார். (இ)

## சித்திரத்தேர்

அனலைதீவு, வியா

அனலைதீவு ஐயனார் ஆலயத் தில் சுமார் ஐந்தரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட் டுவரும் சித்திரத்தேரை இவ் வாண்டு உற்சவத்தின் போது ஓட வைப்பதற்கான முயற்சி தீவிரமாக நடந்து கொண்டி ருக்கிறது. தமிழக ஸ்தபதிமார் கள் இத் துரித பணியில் ஈடு பட்டுள்ளனர்.

இத் தேருக்கான அச்சுகளை ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து தருவிக்க எடுக் கப்பட்ட முயற்சிகள் பயனளிக் காததால், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளு க்கு, இது சம்பந்தமாக எழு தியபோது இத்தேருக்கான அள வில் அச்சு இந்நாடுகளில் இல்லை என்றுபதில் கிடைத்துள்ளதாக தேர்த் திருப்பணிச் சபையார் தெரிவித்தனர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

தெல்லிப்பழை யூனியன் கல் லூரி கனிஷ்டபிரிவு வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் நடைபெற விருக்கி றது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதி காரி டாக்டர் து. சூரிய பாலன் பிரதம விருந்தினரா கக் கலந்து கொள்ளுகிறார். திருமதி வி. சூரியபாலன் பரி சில்களை வழங்குவார். (இ)

## பண்ணிசை

அனுராதபுரம், வெள்ளி

அனுராதபுரம், புதிய நகர் ஸ்ரீவரதராஜ விநாயகப் பெரு மான் ஆலய அலங்கார உற்ச வத்தில் இன்று நல்லை ஞான சம்பந்தர் ஆதீனப் பண்ணி சைப் புலவர் திரு.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பண்ணி சைக்கச்சேரி செய்வார். (கா-சு)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 4-30 7-00, 9-30
HOLIDAY ON THE BUSES

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-3
சனி ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர் - ஜெயலலிதா
கணவன்

4-வது வாரம்
நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி 6-30, 9-3.
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா நடித்த
தங்கப்பதக்கம்

ராஜா (யாழ்நகர்) 62-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

சாந்தி யாழ். நகர் போன்: 7642
சிவாஜி-சாவித்திரி (9வேடங்கள்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நவராத்திரி (புதியபிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஏ. பி. நாகராஜன்

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
The first class comedy sparkles with an excellent cast romance and a bevy of glorious girls.
FRANKIE HOWERD, DORA BRYAN
in
"The Great St. Trinian's Train Robbery"
Color, (Family Entertainment)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna) (Last few days)
Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
ROBINSON CRUSOE
(Family Entertainment) (Scope-color)
1-30 p. m. Special show for Schools

வெலிங்டன் (யாழ். நகர்)
ஜெமினி — வைஜந்திமாலா நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
தேன் நிலவு

லிடோ (யாழ். நகர்) போன்: 7693
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சிவாஜி - சாவித்திரி நடித்த
பந்தபாசம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி-பத்மினி
ஸ்ரீராம் நடித்த
கோடீஸ்வரன்
வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் — லதா நடித்த
உழைக்கும் கரங்கள்

65-வது நாள்
ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

ஈழநாடு

The EELANADU

# மட்டக்களப்பு கொலை: சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பில் தேர்தல் எதிரொலியாக வேட்பாளர் இருவரின் ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியான பெண்ணின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

பேதுறு அன்னம்மா (வயது 40) என்ற இப்பெண்ணின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் சூரியகுமார் என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மற்றும் மூவரை பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக தேடிவருகின்றனர்.

கொலையுண்ட இப்பெண்ணுக்கு 10பிள்ளைகள்என விசாரணையில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மரணவிசாரணை அதிகாரி திரு. ரி. சிவநாதன் மரணவிசாரணை நடத்தினர்.

மூதூரிலிருந்து வீச்சுக்கல் முனைக்கு வந்த 5 பேர் தேநீர் குடிக்கச் சென்றதாகவும் அப்போது வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் சந்தேகநபர் சுட்டதாகவும் அதில் 2 பேர் காயமடைந்ததாகவும், இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மற்றொரு சந்தேகநபர் அவரிடமிருந்து துவக்கைப் பறித்ததாகவும், வீட்டிலிருந்த தாயும், பிள்ளைகளும் வெளியில் வந்தபோது அவர் சுட்டதாகவும், தாய் ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக வேட்பாளர்ஒருவர் துக்கதினம் அனுஷ்டிக்கும்படி துண்டுப் பிரசுரங்கள்வெளியிட்டுள்ளார் அக்குடும்பத்தினரும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு எங்கும் ஒரே கொந்தளிப்பாக இருக்கிறது. பாட்டாளிபுரத்தில் நேற்று நடைபெறவிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ரத்துசெய்யப்பட்டது. மற்றொரு தேர்தல் பிரசாரக் கூட்டம் இரங்கல் கூட்டமாக மாற்றப்பட்டது.

இன்னொரு வேட்பாளர் நேற்று ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்த சம்பவம்பற்றி விளக்கிக்கூறியதாக தெரியவருகிறது.

இம்மாதம் 4ம்தேதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கத்திமுனையில் பயமுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மறுநாள் இருவர் வாள் வெட்டுக்குள்ளானார்கள். இச்சம்பவம் தொடர்பாக 5பேர் கைது செய்யப்பட்டனர். உடனடியாக வேட்பாளர் ஒருவர் சென்று அவர்களை பிணையில் எடுத்துச் சென்றார். (ம)

## கால்களை இழந்த யுவதிக்கு உதவிகோரி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் சுன்னாகம் ரயில் நிலையத்தில் ரயில் வண்டியை விட்டு கீழிறங்கும்போது விபத்துக்குள்ளாகி இரு கால்களையும், வலதுகையின் விரல்களையும் இழந்த லலிதாதேவி என்ற (17வயது) இளம் பெண்ணின் தாயார் வைத்தியஉதவியும் நிதிஉதவியும் கோரி யாழ். லயன்ஸ்கழகத்துக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்.

விபத்துக்குள்ளான லலிதாதேவி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். குடும்பத்தில் மூத்த பெண்ணான இவரது தந்தை திரு.சரவணமுத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் புற்றுநோயினால் காலமானார். இவரது 11வயதான சகோதரி பத்மினிதேவி மயிலணி வித்தியாலயத்தில் கல்விகற்று வருகிறார். இவரது மூத்த சகோதரர்கணநாதலிங்கம் (20வயது) மில்க்வைற் ஸ்தாபனத்தில் தொழில் புரிந்து வருகிறார்.

இவரது தாயார் திருமதி பத்மாவதி சரவணமுத்து யாழ். லயன்ஸ்கழகத்துக்கு விடுத்துள்ள கோரிக்கையில் தமது குடும்பம் மிகவும் ஏழ்மையில் இருப்பதாகவும் விபத்துக்குள்ளான மகளின்பராமரிப்புக்கும் சிகிச்சைக்காகவும் உதவிபுரியுமாறும் கோரியுள்ளார்.

லலிதாதேவிக்குப் பொது மக்களிடமிருந்தும் உதவிகள் கிடைக்கும் என்று யாழ். லயன்ஸ் கழகத்தினர் எதிர் பார்க்கிறார்கள்.

## 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியம்!

யாழ்ப்பாணம், வெள்ளி

அராலி கொலைவழக்கில் எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 75-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதி அராலியில் வி. சண்முகம் என்பவரைக் கொலைசெய்ததாக வி. பாலச்சந்திரன்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி வி. பி. எஸ். வரதராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர்.

அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினர்.

விசாரணைநடுவில் எதிரி கைமோசக்கொலை புரிந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இதனை அரச சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் ஏற்றுக் கொண்டார். நீதிபதியும் இதனை ஏற்று, ஜூரி சபையினரிடம்கேட்டபோது ஜூரி சபையினர் இதனைஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகத் தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து நீதிபதி எதிரிக்கு 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார். (க)

## நீர்வையில் நாளை நடக்கும் ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நீர்வேலி பாலர் முன்னேற்றக் கழகப் பாலர் பகல் விடுதியின் 21வது ஆண்டு நிறைவு விழா நாளைசனிக்கிழமை மாலை கழக மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

நீர்ப்பாசனமின்சக்தி அமைச்சின் முன்னாள் நிரந்தரச் செயலாளர் திரு. ம, ஸ்ரீகாந்தா வரவேற்புரை நிகழ்த்துவார். பாலர் பராமரிப்பு ஆணையாளர் திரு. டி. எஸ். கருணகொட, உதவி ஆணையாளர் திரு. என். மாணிக்க நடராசா கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட், சிவநெறிப்புரவலர் க. கனகராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

வண்டிச்சவாரிப் போட்டி, துவிச்சக்கரவண்டி ஓட்டப் போட்டி, பேச்சுப்போட்டி முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (அ)

## ரஷ்ய—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லவில்லை. ரஷ்யாவில் நடைபெறப்போகும் மகாநாட்டில் தமிழர்விடுதலைக் கூட்டணியினரும் கலந்துகொண்டு தமிழ் ஈழக்கோரிக்கையைச் சமர்ப்பிக்க அழைப்பு விடுப்போம் என்றுகூறிச்சென்றுள்ளனர்.''

திரு. க. கந்தசாமி
ராசுகடை, மார்க்கட், வாடியடி,
பூநகரி

மேற்படி விலாசதாரர் பூநகரிப் பகுதிக்கு 'ஈழநாடு' விற்பனை ஏஜண்டாக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈழநாடு லிமிட்.

6607

## 'அம்புஸ்' விநியோகம்

நல்லூர், வியாழன்

யாழ். மாவட்ட விவசாயப் பயிர்களைத்தாக்கும் பச்சைப் புழுவை அழிக்கவல்ல அம்புஸ் கிருமிநாசினி மருந்து விவசாயிகளின் நலன்கருதி யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எம்.பஞ்சலிங்கத்தின் ஆலோசனைகளுக்கமைய கடந்த ஏழு தினங்களாக விவசாயிகளுக்கு நேரடியாக யாழ்ப்பாணம் தரோரு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு சி. ஐ. சி. லிமிட்டெட் ஸ்தாபன உத்தியோகத்தர் திரு. வி. ஜே. பாலசிங்கத்தின் மேற்பார்வையில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. (அ)

—

## "மச்சானைப் பாத்தீங்களா?"

யாழ்ப்பாணம்,வெள்ளி

மக்கள் வங்கியாழ்.கிளையைச் சேர்ந்த திரு.இரா.பாலச்சந்திரன் எழுதிய ''மச்சானைப் பாத்தீங்களா'' என்ற நகைச்சுவை நாடகநூல் வெளியீட்டு விழா நாளைசனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவிருக்கிறது.

இளைப்பாறிய கூட்டுறவு நிர்வாகச் செயலாளர்திரு பொ. செல்வரெத்தினம் தலைமையில் நிகழும் இவ் விழாவில் யாழ். வளாக வடமொழித்துறை வி. சிவசாமி ஆசியுரை வழங்குவார். கலாநிதிஅ.சண்முகதாஸ் ஆய்வுரை நிகழ்த்துவார். தொழிலதிபர் திரு.எஸ். தியாகராசா முதற் பிரதியை வாங்குவார்.

நூல் வெளியீட்டு நிகழ்ச்சியைத் தொடர்ந்து இந்நாடகம் ஷர்மிலா ஆட்ஸாரால் மேடையேற்றப்படும். (அ)

## யாழ். புற்றுநோய் சிகிச்சை நிலைய நிதிபற்றிய விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

''புற்றுநோய் சிகிச்சை நிலையம்...... யாழ். ரோட்டரிச் சங்கமும் உதவி'' என்ற தலைப்புடன் 28-6-1977 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தி குறித்து யாழ். ரோட்டரிச் சங்கத் தலைவர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் பின்வரும் விளக்கத்தை வெளியிட்டுள்ளார்;

''இம்மாதம் 30ம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 10ந் திகதிவரை, யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கம் சென்பற்றிக்ஸ் கல்லூரிப் பழைய மாணவர் சங்க உறுப்பினரின் உதவியுடன், யாழ்ப்பாணத்தில் ஒரு புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைக்கும் நோக்கத்துடன், நடாத்தப்போகும் பொருட்காட்சியிலும், கார்ணிவலிலும் சேரும் பணத் தொகையில் அரைவாசி சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கே செல்லும் என்றும், மிகுதி அரைவாசியில் நியாயமான பணத் தொகையை நாம், யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவிடம் கையளிப்போமென்றும், மிகுதிப் பணத்தை ரோட்டரிச் சங்கம் ஆற்றும் சேவைகளுக்குப் பயன்படுத்துவோம் என்றும் கூற விரும்புகிறேன். இக்கூற்றை நான் 11-6-1977 ந் திகதி யாழ்ப்பாணம் லயன்ஸ் கிளப், யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவிடம், ரூபா 35,000-00 பணத்தைக் கையளித்த் வைபவத்தில் பல பிரமுகர்கள் முன்னிலையில் வெளியிட்டிருந்தேன். இவ்வைபவத்தில் யாழ்ப்பாணம் புற்றுநோய் சங்கத்தின் தலைவர் டாக்டர் நதானியலும், டாக்டர் கனகரத்தினமும் பிரசன்னமாயிருந்தார்கள் என்பதையும் கூற விரும்புகிறேன். எனது கூற்றைத் தெளிவாக நான் வெளியிட்டிருந்தும், அவ்வைபவத்தில் பிரசன்னமாயிருந்த டாக்டர் கனகரத்தினம், எவ்வளவு பணம் யாழ்ப்பாணம் புற்றுநோய் சிகிச்சை நிலையம் ஸ்தாபிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் கையளிக்கப்படும் என்று வினவியிருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை அளிக்கின்றது.''

## காரைநகர் வீடு எரிப்பு வழக்கு

காரைநகர், வியாழன்

காரைநகரில் வீடொன்றையும் அதனுடன் சேர்ந்த கடையொன்றையும் எரித்துச் சேதம் விளைவித்ததாக 7 பேர்களிடம் 18,000 ரூபா நஷ்டஈடு கோரி இந்துமதி என்ற பெண் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

எதிரிகள் 7 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

நீதிபதி வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 9-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். (க-அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B/14894

1. கார்த்திகேசு வேலுப்பிள்ளையும் பெண்
2. பார்வதம்மாளும் இருவரும் மானிப்பாய்

வழக்காளிகள்

எதிராக

1. சுப்பிரமணியம் பாலசுந்தரமும் பெண்
2. இராசம்மாவும், இருவரும் நவாலி வடக்கு, மானிப்பாய்.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் கோட்டின் M B/14894-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணியை 1977-ம் வருஷம் ஆடிமாதம்20-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 4,933/33ம் 5-6-75 தொடக்கம் 26-12-75 வரைக்கும் ரூபாய் 2,500/-க்கு 12% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 494/25ம்

### ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்த்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை ''கணக்கன் தோட்டம்'' நி. பர 3ம் மூன்றும், கிழக்கெல்லைக் கிணற்றில் பங்கும் தூர்வையும் வழிப்பாவிப்புரித்தும் வான் பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சுப்பையா பெண் நாகம்மா வினாசனம், வடக்கு வேலுப்பிள்ளை சுப்பையாவினாதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு சுப்பு வைரமுத்துவுக்கும் பங்காளருக்குமுரியவாதனம். இதடங்கலும் பதிவு நிர்: E 279/240.

ஜே. ஏ. எட்வேட்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
24-6-77.

6608

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.